உலை பாதுகாப்பனது என்றால் அணு உலை விபத்து காப்பீட்டுச் சட்டம் எதற்காக ?

***தேசத் துரோகச் செயலை முறியடிப்போம்! கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடுவோம்!!***

அணு உலைகள் ஆபத்தானவை எனறு தங்கள் நாடுகளிலேயே அவைகளை மூடி வரும் ஏகாதிபத்திய முதலாளிகளிடம் 8 லட்சம் கோடிக்கு அணு உலை வாங்க ஒப்பந்தம் போட்டிருக்கிறது இந்திய அரசு. பன்னாட்டு முதலாளிகளின் லாப வெறிக்கு இந்திய மக்களை பலியிடும் இந்த செயல்தான் தேசத் துரோகம்.

சாதாரண பாட்டரி கம்பெனி என்று நம்பிக்கொண்டிருந்த யூனியன் கார்பைடு நிறுவனத்திற்குள் நச்சுவாயுவை உற்பத்தி செய்ய திட்டம் வகுத்துத் தந்தவர்களும், விவசாயிகளுக்கே தெரியாமல் மரபீனி மாற்றம் செய்யப்பட்ட விதைகளைப் புகுத்தி விவசாயப் பல்கலைக் கழகங்களை பன்னாட்டு நிறுவனங்களின் அடியாள் கழகங்களாக மாற்றுபவர்களும், ஆபத்தான அணு உலைகளை பாதுகாப்பானது என்று மக்களை பலி கொடுக்கத் துடிக்கும் விஞ்ஞானிகளும், ஓட்டுக்கட்சிகளும், ஊடகங்களும்தான் தேசத் துரோகிகள்.

வால்மார்ட்டுக்காக சிறு வணிகர்களை அழிப்பதையும், சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காக விவசாயிகளை விவசாயத்தைவிட்டே துரத்துவதையும் 'வளர்ச்சி - முன்னேற்றம்' என்று சொல்லும் மறுகாலனியாக்கம்தான் அணு உலையையும் முன்னேற்றம் என்கிறது. "எங்களது வருங்கால தலை முறையைப் பாதுகாக்க எங்களது உயிரை விடவும் மதிப்பு மிக்கது ஏதும் இருந்தால் அதையும் கொடுக்கத் தயாராக உள்ளோம்" என்று அணு உலையை இயக்க விடாமல் கூடங்குளம் மக்கள் உறுதியாக தடுத்து நிற்கிறார்கள். போராடும் மக்களுக்கு தோள் கொடுப்போம்! கூடங்குளம் அணு உலையை இழுத்து மூடுவோம்!!

மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலை வைக்கும்

## கூடங்குளம் அணு உலையை
# இழுத்து மூடு!

இந்தியாவை அமெரிக்காவின்அடிமையாக்கும் இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தை கிழித்தெறிவோம்!

வளர்ச்சி-வேலைவாய்ப்பு-வல்லரசு' என்று ஆசைகாட்டி தேசத்துரோக, மக்கள் விரோத சதியில் ஈடுபட்டிருக்கும் காங்கிரசு, பா.ஜ.க உள்ளிட்ட ஓட்டுப்பொறுக்கிகளைப் புறக்கணிப்போம்!

தனியார்மயம், தாராளமயம், உலகமயம் - மறுகாலனியாக்கத்தை முறியடிப்போம்!


**மக்கள் கலை இலக்கியக் கழகம்**
**விவசாயிகள் விடுதலை முன்னணி**
**புரட்சிகர மாணவர்- இளைஞர் முன்னணி**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி**
**பெண்கள் விடுதலை முன்னணி**

***தொடர்புக்கு: அ.முகுந்தன்,***
***110, 2-வது மாடி, மாநராட்சி வணிக வளாகம்,***
***63, ஆற்காடுசாலை, கோடம்பாக்கம்,***
***சென்னை - 24. பேச: 9444 834519.***

படியுங்கள்

புதிய கலாச்சாரம் - புதிய ஜனநாயகம்

# மக்களின் உயிருக்கும் நாட்டின் அரைகுறை இறையாண்மைக்கும் உலை வைக்கும்...



## கூடங்குளம் அணு உலையை
# இழுத்து மூடு!

# பேரணி
# முற்றுகை

பிப். **11 - 2012** காலை 10.30
ஜவகர் திடல், பாளையங்கோட்டை மார்கெட்
திருநெல்வேலி

**ம.க.இ.க | வி.வி.மு | பு.மா.இ.மு**
**பு.ஜ.தொ.மு | பெ.வி.மு**

*அன்பார்ந்த உழைக்கும் மக்களே!*

உயிருக்கே உலை வைக்கும் அணு உலையை இழுத்து மூடக்கோரி கூடங்குளம் மக்கள் இன்றுவரையிலும் உறுதியாகப் போராடி வருகிறார்கள். இதை தேச விரோதச் செயல் என்று சித்தரித்து போரடுபவர்களுக்கு எதிராக மக்களை கொம்பு சீவி விடுகிறார்கள் ஓட்டுக்கட்சிகள், ஊடகங்கள், அப்துல் கலாம் போன்ற விஞ்ஞானிகள். கிறித்துவர்களின் போராட்டம் என்று இந்து மதவெறியைத் தூண்டி சீர்குலைக்க அணு உலைக்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் மீது கூட்டாக தாக்குதல் நடத்தி உள்ளார்கள் இந்து முன்னணி, காங்கிரசுக் காலிகள். இந்தப் பொய்ப் பிரச்சாரத்திற்கு பலியாகிவரும் மக்கள், மின்வெட்டு நீங்க வேண்டுமானால் அணு உலை அவசியம் என நம்புகின்றனர்.

*மின்வெட்டை நீக்க வந்ததா அணு உலை?*

இல்லை! 1984 ஆம் ஆண்டு ரசியாவிடமிருந்து அணு நீர்மூழ்கிக் கப்பலைப் பெற்றிட போடப்பட்ட ஒப்பந்தத்தின் விளைவுதான் கூடங்குளம் அணு உலை. ஒரு கப்பலைப் பெற 8 அணு உலைகளை திணித்துள்ளார்கள். இந்த உண்மையை புதைத்துவிட்டு 'மின் பற்றாக்குறையைப்' போக்கக்கத்தான் அணு உலை என்று நாடகம் ஆடுகிறது மன்மோகன் அரசு. அனைவருக்கும் தடையற்ற மின்சாரம் வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தற்போதைய மின் பற்றாக்குறை எப்படி வந்தது?

1990 களுக்குப் பிறகு நடைமுறைப் படுத்தப்பட்ட தனியார்மயம் - தாராளமயம் - உலகமயக் கொள்கைகளால்தான் நாட்டில் மின் தேவை அதிகரித்துள்ளது. போர்டு, ஹூண்டாய், நோக்கியா போன்ற பன்னாட்டுக் கம்பெனிகள், தொழிற் நுட்ப பூங்காக்கள், ஐந்து நட்சத்திர கேளிக்கை விடுதிகள், பன்னாட்டு முதலாளிகள், டாடா, அம்பானி போன்ற தரகு அதிகார வர்க்க முதலாளிகள் உற்பத்தி செய்து குவிக்கும் மின்சாதன நுகர்வுப் பொருள் நிறுவனங்கள் , அவற்றை வாங்கி அனுபவிக்கும் பணக்காரர்களின் குடியிருப்புகள் ஆகியவற்றை நோக்கி மானிய விலையில் பாய்கிறது மின்சாரம். இவர்களுக்குப் போக மிஞ்சுவதுதான் மக்களுக்கு கிடைப்பது.

ஏற்கனவே 1 லட்சத்து 82 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தயாரிக்கப்பட்டும் 42% கிராமங்களுக்கு மின்னிணைப்பே இல்லை. சிறு, குறுந்தொழில்கள், விவசாயத்துக்கோ என்றைக்குமே மின்வெட்டுதான். ஆக, எத்தனை அணு உலைகள் தொடங்கப் பட்டாலும் அது ஒளியூட்டப்போவது கார்ப்பரேட் முதலாளிகளுக்காகத்தானே தவிர மக்களுக்காக அல்ல என்பதே உண்மை.

*அணு உலைக்குள் மறைந்துள்ள அரசியல் என்ன?*

அன்று உலகப் போரில் மிஞ்சிய அணு வெடி மருந்துகளை விற்று லாபம் ஈட்ட அமெரிக்கா செய்த சூழ்ச்சிதான் பசுமைப் புரட்சி. வெடி மருந்துகளை உரம், பூச்சி மருந்துகளாக இந்தியாவில் கொட்டப்பட்டு இந்த மண்ணையும், விவசாயத்தையும் மீட்க முடியாத அழிவிற்குள் தள்ளியுள்ளதை நாடே அறியும்.

இன்றோ, தனது உலக மேலாதிக்க நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பதற்கும், ஆசியப் பகுதிகளில் அமெரிக்காவின் அடியாளாகவும், கங்காணியாகவும் செயல்படுவதற்கும் இந்திய அரசு ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் போடப்பட்ட ஒப்பந்தம்தான் அமெரிக்க - இந்திய அணு சக்தி மற்றும் ராணுவ ஒப்பந்தங்கள். இதன்படிதான் இந்நாடு முழுவதும் அணு உலைகளை புதைத்து வருகிறது அமெரிக்கா .

ஒப்பந்த விதிமுறைகளின்படி ரசியாவின் அணு உலையானாலும் சரி இந்நாட்டின் அனைத்து அணு உலைகளிலும் பயன்படுத்தப்படும் எரிபொருள் மற்றும் வெளியேற்றப்படும் கழிவு பற்றிய விவரங்களை ஒவ்வொரு ஆண்டும் அமெரிக்காவின் வெள்ளை மாளிகைக்கு தெரிவித்து ஒப்புதல் பெறவேண்டும். நாட்டின் அறைகுறை இறையாண்மையையும், மக்களின் உயிரையும் அடகு வைப்பது மானக்கேடு இல்லையா? உயிரைவிட மானம் பெரிது என்பார்கள். ஆனால் மன்மோகன் சிங்கோ இந்தியாவின் மானத்தை அமெரிக்காவுக்கும், இந்திய மக்களின் உயிரை அணு உலைகளுக்கும் தாரை வார்க்கத் துடிக்கிறார்.

*அணு உலை பாதுகாப்பானதா?*

கூடங்குளம் அணு உலை அமைந்துள்ள இடத்திற்கு அடியில் எரிமலை இருப்பதாகவும், பூகம்பத்தால் தாக்கப்படும் வாய்ப்பு மிகுந்துள்ளதாகவும் நிலவியல், நீரியல் ஆய்வுகள் உறுதிபடுத்துகின்றன. அணு உலைக்கான எரிபொருளைவிட அதிலிருந்து வெளியேற்றப்படும் அணுக்கழிவு ஆபத்தானது. அணு உலை இயங்கத் தொடங்கினாலே 200க்கும் மேற்பட்ட கதிரியக்கத் தூசுகள், நிலத்தையும், நீரையும், மீன்வளத்தையும், மக்களையும், கால்நடைகளையும் அழிக்கும் அபாயம் உள்ளது. சுமார் 48 ஆயிரம் ஆண்டுகள் வரை அணுக்கதிர் வீச்சை வெளிப்படுத்தும் அணுக்கழிவுகளை செயலிழக்கவோ, பாதிப்பின்றி பாதுகாக்கவோ இதுவரை எந்த தொழிற்நுட்பமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதே அறிவியல் பூர்வமான உண்மை.

அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட பூகம்பத்தால் புகுஷிமாவில் சிக்கிக் கொண்ட அணுக்கழிவை எடுத்துப் பாதுகாக்க 40 ஆண்டு காலம் பிடிக்கும், 75 ஆயிரம் கோடிகள் செலவாகும், அணுக்கழிவு கிடைக்காமல் போனால் பாதிப்பு அளவிட முடியாததாய் இருக்கும் என்றும் அலறுகிறது அந்நாட்டு அரசு. ரசிய செர்னோபிலில் அணு உலை வெடித்ததில் இருந்து வெளியேறிய அணுக்கதிர் வீச்சில் சுமார் 70 ஆயிரம் மக்கள் புற்று நோய்க்கு பலியாகியுள்ளனர். இதையெல்லாம் நன்கு அறிந்த அமெரிக்கா, கடந்த 30 ஆண்டுகளில் ஒரு அணு உலையைக் கூட தன் நாட்டில் நிறுவவில்லை. அதிக அளவு யுரேனியத்தை விற்பனை செய்யும் ஆஸ்திரேலியா இதுவரை ஒரே ஒரு அணு உலையைக்கூட நிறுவவில்லை. இதெல்லாம் மக்களுக்கு தெரிய வாய்ப்பு இல்லாததால்தான் அப்துல்கலாம் போன்ற விஞ்ஞானிகள் அணு உலை 100% பாதுகாப்பானது என்று ஏமாற்றுகின்றனர். அணு